OS 203/2018

வா.சா.2 கோபாலகிருஷ்ணன் த/பெ தாமோதரன்

நாள் 27.03.2026

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தது என்றால் பழனி மற்றும் திலகம் அழைத்தார்கள். என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் பாண்டு வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். பாண்டை யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை தாமோதரனுக்கு எத்தனை வாரிசு என்றால் நான் மட்டும் தான். நான் மட்டும் தான் வாரிசு என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை என்னிடம் இருக்கிறது. பாண்டில் உள்ள எனது தந்தையின் கையொப்பம் போன்று எனது தந்தையின் கையொப்பம் அடங்கிய வேறு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எனக்கு எந்த நேரடி தொடர்பும் இல்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.